# <u>ஆற்காடு நகராட்சி</u>

## <u>2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் – 6 ஆம் நாள் திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணி அளவில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்</u>

### <u>தலைமை :– தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்</u>

| மன்றக்கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்றக் கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 06-01-2020 | **பொருள் எண்.01)** ஆற்காடு நகராட்சியில் மத்திய நிதிக்குழு மானிய நிதி திட்டம் (14th CFC 2019–20) திட்டத்தின் கீழ் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தார்சாலை அமைக்க வேண்டி கீழ்காணும் பணிகளுக்கு திட்ட பிரேரணை தயார் செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற முன்மொழிவு அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | நகர்மன்றத் தீர்மான எண்.1 அனுமதிக்கப்பட்டது |

| வ. எண். | சிப்பம் எண் | வார்டு எண். | பணியின் பெயர் | சாலையின் தன்மை | சாலையின் நீளம் (மீ) | அகலம் (மீ) | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | 19 | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் குடியிருப்பு பகுதி 1 ல் தார் சாலை அமைத்தல் பணி | தார் சாலை | 750.00 | 5.00 | **44.58** |
| 2 | 2 | 18 | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் குடியிருப்பு பகுதி 2 ல் தார் சாலை அமைத்தல் பணி | தார் சாலை | 850.00 | 5.00 முதல் 8.00 வரை | **49.50** |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 3 | 3 | 20,23 & 29 | பார்த்திபன் நகர், தண்டுகாரன் தெரு ,வேல்முருகேசன் தெரு விரிவாக்கம் ஆகிய பகுதிகளில் தார் சாலை அமைத்தல் பணி | தார் சாலை | 700.00 | **4.00** முதல் **6.00** வரை | **43.40** |

அ.கு **1)** மன்றம் அனுமதி வழங்கலாம் .

**2.** மேற்காணும் பணிகளுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,வேலூர் அவர்களிடம் நிர்வாக அனுமதி பெறவும், மண்டல செயற் பொறியாளர், வேலூர் அவர்களிடம் தொழில் நுட்ப அனுமதி பெறவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**3.** மேற்காணும் திட்டத்திற்கு அரசு மான்யம் பெற்று திட்ட பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**4.**திருத்திய வரவு செலவு திட்டம் **2019–20**ன் கீழ் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.**0052/2020/**இ**1**)

06-01-2020

**பொருள் எண்.02)** ஆற்காடு நகராட்சியில் மத்திய நிதிக்குழு மானிய நிதி திட்டம் (14th **CFC 2019–20)** திட்டத்தின் கீழ் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தார்சாலை அமைக்க வேண்டி கீழ்காணும் பணிகளுக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எ ண். | சிப்பம் எண் | வார்டு எண். | பணியின் பெயர் | சாலையின் தன்மை | சாலையின் நீளம் (மீ) | அகலம் (மீ) | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 4 | 28,16 & 9 | ராஜகோபால் தெரு, பி.டி யோகலிங்கம் தெரு ,கோட்டை மேட்டுத் தெரு ஆகிய பகுதிகளில் தார் சாலை அமைத்தல் பணி | தார் சாலை | 720.00 | **5.00** முதல் **6.00** வரை | **35.00** |

அ.கு **1)** மன்றம் அனுமதி வழங்கலாம் .

**2.** மேற்காணும் பணிகளுக்கு மண்டல செயற் பொறியாளர், வேலூர் அவர்களிடம் தொழில் நுட்ப அனுமதி பெறவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**3.** மேற்காணும் திட்டத்திற்கு அரசு மான்யம் பெற்று திட்ட பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**4.**திருத்திய வரவு செலவு திட்டம் **2019–20**ன் கீழ் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.**0052/2020/**இ**1**)

நகர்மன்றத் தீர்மான எண்.2 அனுமதிக்கப்பட்டது

**2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் – 09 ஆம் நாள் வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணி அளவில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்**

09-01-2020

**பொருள் எண்.3**

ஆற்காடு நகரம் வார்டு னு பிளாக் 15, நகரளவு எண். 1/7, 8, 2/3, முதல் 9 வரை 4/3, 5/1 முதல் 15 வரை 6/1 முதல் 15 வரை 16 பகுதி 8/2, 9/2, 3, 4, 5, 7, 8, 9,10, 11, 10/1, 2, 3, 4, 9பகுதி 10ஏ பகுதி , 10பி பகுதி, 11, 12, 11/1, 5, 8, 9, 12/5, 6, 7, 13/2, 3ஏ, 3பி1, 3பி2, 3சி, 4, 5, 6, 13/11, 12ன் பகுதி ஆகிய புல எண்களில் 18.88 ஏக்கர் நிலப்பரப்பில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.28296/05/எல்.ஏ2 நாள்.31.05.2006ல் உத்தேச மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் 89/2006 என எண்ணிட்டு (ம.3) ந.ஊ.இ (எண்.20/06 திருத்தியது) தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவிற்கு தீர்மான எண்.306 நாள்.29.08.2016ல் ஏற்கனவே பிளாக் தவறாக பதிவு செய்யப்பட்ட தானப்பத்திர எண்.7350/2011 நாள். 18.10.2011–ஐ ரத்து செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட அதே தீர்மானத்தில் கண்டுள்ளவாறு சரியான பிளாக் எண் கொண்டு பதிவு செய்யப்பட்ட தானப்பத்திர எண்.5324/2016 நாள்.31.08.2016–ஐ ஏற்று நகரமன்ற தீர்மான எண்.326/2016 நாள். 06.09.2016ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் ஆணையின்படி பொறியாளர் பிரிவின் இளநிலை பொறியாளர் அவர்களின் குறிப்பில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

1) குழாய் பாலங்கள் 21 எண்ணிக்கையும் மற்றும் 1 எண்ணிக்கை ஆர்.சி.சி சிறுபாலம் அமைக்கப்பட்டுள்ளது.
2) மழைநீர் வடிகால்வாய் 4353.00 மீட்டர் அளவு போடப்பட்டுள்ளது.
3) கேட் வால்வுகள் 14 எண்ணிக்கையும் மற்றும் குடிநீர் பகீர்மான குழாய்கள் 2780.20 மீட்டர் அளவு அமைக்கப்பட்டுள்ளது மற்றும் 23 எண்ணிக்கைகள் பெயர்பலகைகள் அமைக்கப்பட்டுள்ளது.
4) இருவர் அமரும் ஊஞ்சல், சறுக்குமரம் மற்றும் நால்வர் அமரக்கூடிய சீசா அமைக்கப்படவில்லை என இளநிலை பொறியாளர் தெரிவித்ததின் அடிப்படையில் மனுதாரருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டது. மனுதாரர் மேற்படி இருவர் அமரக்கூடிய சீசா அமைக்கப்பட்டுள்ளதாக புகைப்படத்துடன் 02.01.2020 அன்று கடிதம் வழங்கியுள்ளார்.

பணிகள் முடிக்கப்பட்டுள்ளனவா என்பது குறித்து பொறியாளர் பிரிவிற்கு கோப்பினை அனுப்பியதின் பேரில் 09.01.2020 அன்று மேற்கண்ட பணிகள் முடிக்கப்பட்டது என பொறியாளர் பிரிவில் தெரிவித்துள்ளதாலும், ஆய்வு கட்டமைப்பு 4,94,670/– (செலான்எண்.025/ஹசு1/19–20/0011039) அபிவிருத்தி கட்டணம் ரூ.40,000/– செலான் எண்.025/ஹசு1/19–20/0011040) நாள்.03.01.2020 நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் வருவாய் ஆய்வரின் குறிப்பின்படி காலிமனை வரியும் செலுத்தப்பட்டுள்ளது. மனைப்பிரிவு அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அ.கு:– 1) மன்றம் அனுமதி வழங்கலாம்

2) தீர்மான எண்.306 மற்றும் 326ன் படியும் பொறியாளர் பிரிவின்அளித்துள்ள குறிப்பின் அடிப்படையில் வரைபடத்தில் உள்ளவாறு 220 மனைகள் (ம) மூன்று கடை மனைகள் (ம) சமுதாய கூடம் உள்ள மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.5992/2010/எப்1.

நகர்மன்றத் தீர்மான எண்.3

**அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

| 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் – 23 ஆம் நாள் வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணி அளவில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள் | | |
|---|---|---|
| 23.01.2020 | **பொருள் எண்.01)** வார்டு மறுவரையறை ஆணையம், நகராட்சி நிர்வாக ஆணையரகம், மாவட்ட வார்டு மறுவரையறை அலுவலர் ஆகியோர்களின் வழிகாட்டுதலின்படி இந்நகராட்சியால் சமர்ப்பிக்கப்பட்ட வார்டு மறுவரையறைக்கான கருத்துருவிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதையடுத்து தமிழ்நாடு அரசிதழ் எண்.407. நாள்.14.12.2018-ல் வார்டு வரையறைக்கான தமிழக அரசின் ஒப்புதல் அளிக்கப்பட்டது குறித்த அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.<br><br>இதனை அடுத்து உள்ளாட்சி அமைப்புகளில் 9 மாவட்டங்களுக்கு வார்டு மறுவரையறை மேற்கொள்ளுதல் தொடர்பாக தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் அவர்களால் நடத்தப்பெற்ற 13.01.2020 தேதிய கானொளி காட்சி கூட்டத்தில் நடைபெற்ற கானொளி கூட்டத்தில் சில அறிவுரைகள் வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம். ந.க.எண். 575/2020/தேர்தல், நாள்.21.01.2020-ல் வார்டு மறுவரையறையினை மறுஅறிவிக்கை செய்வது நிமித்தம் 01.04.2017முதல் 31.03.2019 வரையிலான குடியிருப்பு வரியினங்கள் இணைக்கப்பட்டு உரிய கருத்துரு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>இதன் பொருட்டு வார்டு மறுவரையறையினை மறுஅறிவிக்கை செய்வதற்கான கருத்துரு உரிய வழிமுறையாக தமிழ்நாடு வார்டு மறுவரையறை ஆணையத்தின் ஒப்புதலுக்கு சமர்பிக்க மன்ற ஒப்புதலுக்காக பொருள் வைக்கப்படுகிறது. அ.கு 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br><br>(ந.க.எண்.1742/2017/எப்1) | நகர்மன்றத் தீர்மான எண்.4 **ஒப்புதல் அளிக்கப்பட்டது.** |

| 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் – 31 ஆம் நாள் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணி அளவில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள் | | |
|---|---|---|
| 31.01.2020 | **பொருள் எண்.01)** இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் டிசம்பர்–2019 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கு வைக்கப்படுகிறது.<br>அ.கு. 1) மன்றம் பதிவுசெய்யலாம்<br>ந.க.எண்.0665/2018/சி1 | நகர்மன்றத் தீர்மான எண்.5 பதிவு செய்யப்பட்டது |
| 31.01.2020 | **பொருள் எண்.02)** இந்நகராட்சி பொறியாளர் அவர்களின டிசம்பர்–2019, மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கு வைக்கப்படுகிறது.<br>அ.கு. 1) மன்றம் பதிவுசெய்யலாம் | நகர்மன்றத் தீர்மான எண்.6 பதிவு செய்யப்பட்டது |
| 31.01.2020 | **பொருள் எண்.03)** இந்நகராட்சியின் 2018-19ம் ஆண்டு கணக்குகள் (பொதநிதி, குடிநீர் ம வடிகால் நிதி, கல்விநிதி) தணிக்கைக்கு சமர்பித்திடும் பொருட்டு உரிய தலைப்புகள் வாரியாக நேர் செய்து பணிகள் கீழ்க்கண்டுள்ளவாறு பயிற்சி பெற்ற கணக்கியல் ஆலோசகர் மூலம் முடித்துத்தர தோராய செலவினம் ரூ.75000/-க்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அ.கு:- 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி செலவினத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.421/2019/பி1 | நகர்மன்றத் தீர்மான எண்.7 அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td>31.01.2020</td>
<td>
பொருள் எண்.04) பார்வையிற்காணும் இந்நகராட்சியின் 2018-19ம் ஆண்டு கணக்குகள் (பொதுநிதி, குடிநீர் (ம) வடிகால் நிதி, கல்விநிதி) தணிக்கைக்கு சமர்பித்திடும் பொருட்டு உரிய தலைப்புகள் வாரியாக நேர் செய்து பணிகள் கீழ்க்கண்டுள்ளவாறு முடித்துத்தர 18.10.2019 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டது.
<table>
<tr><th>SL. NO.</th><th>PARTICULARS</th><th>NAME</th><th>AMOUNT</th></tr>
<tr><td>1.</td><td>1. Preparation of Journal Book Data Entry for Annua Account.<br>2. Preparation of General Ledger Data Entry for Annual Account<br>3. Preperation of Trail Balance, Balance Sheet Data entry and printout Charges for the Year 2018-19</td><td>Cursor Solution, 30/4, Ellaiamman Koil Street, Vannanthurai<br>Adayar, Chennai-600020.</td><td>Rs.70500/-</td></tr>
<tr><td>2.</td><td>1. Preparation of Journal Book Data Entry for Annua Account.<br>2. Preparation of General Ledger Data Entry for Annual Account<br>3. Preperation of Trail Balance, Balance Sheet Data entry and printout Charges for the Year 2018-19</td><td>Gsoft System, Values Building Relationship 2/1, IInd Floor,<br>Jothi Nagar main Road, Ekkattuthangal, Chennai – 32</td><td>Rs. 70000/-</td></tr>
</table>
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண்.8 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>31.01.2020</td>
<td> <u>அ.கு:-</u> வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் வ.எண்.2ல் உள்ள நபர் கொடுத்துள்ள குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று மன்ற அனுமதியினை எதிர்நோக்கி வேலை உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதனை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.421/2019/பி1 </td>
<td></td>
</tr>
<tr>
<td>31.01.2020</td>
<td> பொருள் எண்.05) இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவின் கீழ் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் 59 நபர்கள் DBC பணியாளர்களின் 52 நபர்கள் மற்றும் துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் 5 நபர்கள் ஆகியோருக்கு 2019–20ஆம் ஆண்டிற்கு பொதுசுகாதார உபகரணங்கள் வாங்குவதற்கு உள்ளூர் வெளியூர் விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><td>[illegible]</td><td rowspan="2">பொருட்களின் பெயர்</td><td>நிறுவனத்தின் பெயர்</td><td>நிறுவனத்தின் பெயர்</td></tr>
<tr><td>1</td><td>AA Enterprises<br>SSI (UAN) TN0ID00012841<br>25, Agaram Main road, Paduvanchary, Chennai</td><td>ஜார்ஜ் டவுன் பல்நோக்கு தொழில் கூட்டுறவு சங்கம்</td></tr>
<tr><td>1</td><td>ரிப்ளக்ஷன் காஜ்கேட்</td><td>ரூ.700/–</td><td>ரூ.750//–</td></tr>
<tr><td>2</td><td>கையுரை</td><td>ரூ.250/–</td><td>ரூ.275/–</td></tr>
</table></td>
<td>நகர்மன்றத் தீர்மான எண்.9 ஒப்புதல் அளிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>3</td><td>முகஉறை</td><td>ரூ.200/–</td><td>ரூ.250/–</td></tr>
<tr><td>4</td><td>மழைகோட்</td><td>ரூ.1200/–</td><td>ரூ.1400/–</td></tr>
</table>
<br>
அ.கு:– 1) வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் AA Enterprises vஅவர்களின் குறைந்த விலைப்புள்ளி அவசர அவசியம் கருதி பொதுசுகாதாரப் பணிகளின் அவசியத்தை கருதி பொது சுகாதாரப் பணிகள் பாதிக்காமல் இருக்க தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொள்ள மன்ற ஒப்புதல் வழங்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>31.01.2020</td>
<td>
பொருள் எண்.06) இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் (Temephose 50 EC) டெமிபாஸ்50 EC கொசு புழு ஒழிப்பு மருந்து இருப்பு குறைவாக உள்ள காரணத்தினால் 100 லிட்டர் அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஆன TNMSL நிர்ணயம் செய்த விலை விகிதத்தில் வாங்கி கொள்ளவும் இதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.75000/–க்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>
அ.கு:– 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்<br><br>
2) அவசர அவசியம் கருதி டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள தனி அலுவலர் முன் அனுமதி பெற்று உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண்.10 ஒப்புதல் அளிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 31.01.2020 | **பொருள் எண்.07)** இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவின் கீழ் பொதுமக்களுக்கு SBM மழைநீர் சேகரிப்பு மற்றும் சுற்றுபுற தூய்மை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவேண்டி நகரில் உள்ள மக்கள் கூடும் இடங்களில் உள்ள அரசு மற்றும் நகராட்சி சுவர்களில் விளம்பர செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.30,000/–க்கு மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அ.கு:– 1)** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்<br><br>2) அவசர அவசியம் கருதி பொதுமக்களுக்கு ஒரு முறை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் தூக்கி எரியப்படும் பிளாஸ்டிக் SBM மற்றும் சுற்றுப்புறத் தூய்மைக் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த தனி அலுவலர் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம். | நகர்மன்றத் தீர்மான எண்.11 ஒப்புதல் அளிக்கப்பட்டது |

31.01.2020

**பொருள் எண்.08)** இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவின் கீழ் ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருள் குறித்து SBM சுற்றுப்புற தூய்மைக் குறித்து சுவர்களில் ஓவியம் வரைய விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி விகிதம் ரூ |
|---|---|---|
| 1 | Viswas Stamps No.9A, Arni Road, Vellore – 632001 | **90/– (**1 Sq.ft) |
| 2 | Ravi Arts, Designs and Screens No.12, Pillayar koil street, Walaja, Vellore | **120/(**1 Sq.ft) |
| 3 | GLOBAL ARTS<br>No.112, Arrakkonam Road,<br>Nemili, Vellore district | **105(**1 Sq.ft) |

**அ.கு:–** வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண். 1ல் கண்டுள்ள Viswas Stamps No.9A, Arni Road, Vellore – 632001 அவர்களின் குறைந்த விலைப்புள்ளி அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன்னனுமதி பெற்று ஏற்று உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம் மேற்படி செலவினம் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

நகர்மன்றத் தீர்மான எண்.**12** ஒப்புதல் அளிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| 31.01.2020 | **பொருள் எண்.09)** இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவின் கீழ் பராமரிக்கப்படும் பெரிய அசன்புராவில் இருந்து வரும் முப்பதுதொட்டி கால்வாய் மற்றும் கோணன் காலனி இருந்து வெளியேறும் தாஜ்புரா கால்வாயில் தேங்கியுள்ள துர்யினால் நகரில் வெள்ளப்பெருக்கு ஏற்படும்போது வெள்ளம் சூழ்ந்து கொள்கின்றது. எனவே பருவகால முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள தூர் அகற்ற வேண்டியுள்ளதினால் இதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கு மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகின்றது.<br><br>அ.கு.:– 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br><br>2) அவசர அவசியம் கருதி பொதுசுகாதாரப் பணிகள் பாதிக்காமல் இருக்க தனி அலுவலர் முன் அனுமதி பெற்று JCB வாகனம் டிப்பர் லாரிக்கு விலைப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம். | நகர்மன்றத் தீர்மான எண்.13 ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 31.01.2020 | **பொருள் எண்.10)** இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் அறையிலுள்ள மேசையின் மீது 6'' X 3'' அடி அளவில் கண்ணாடி பொருத்துதல் பணி மேற்கொள்வதற்கான தோராய செலவினம் ரூ.14000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அ.கு.:– 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br><br>2) மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br><br>3) தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று இப்பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று நடடிவக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம். | நகர்மன்றத் தீர்மான எண்.14 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 31.01.2020 | **பொருள் எண்.11)** இந்நகராட்சிக்குட்பட்ட பேருந்துநிலையம் உட்புறம் உள்ள பி.டி.ஈஸ்வரன் மாளிகையில் வெளிப்புற சுவர் (தொங்கல்) பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளதால் உடன் இடித்து அப்புறப்படுத்துதல் பணி மேற்கொள்வதற்கான தோராய செலவினம் ரூ.19000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அ.கு.:– 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>2) மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br><br>3) தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் பெற்று நடடிவக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம். | நகர்மன்றத் தீர்மான எண்.15 அனுமதிக்கப்பட்டது |
| 31.01.2020 | **பொருள் எண்.12)** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17, குட்டகரை தெரு மற்றும் அபாய்தெரு பகுதிகளில் வால்வு தொட்டி பகுதிகளில் மணல்கொண்டு நிரப்புதல் பணி மேற்கொள்வதற்கான தோராய செலவினம் ரூ.9000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அ.கு.:– 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>2) மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br><br>3) தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் பெற்று நடடிவக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம். | நகர்மன்றத் தீர்மான எண்.16 அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td>31.01.2020</td>
<td>
பொருள் எண்.13) இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள ஆணையர் மற்றும் பொறியாளர் தனி அவர்களின் அறையிலுள்ள மேசையின் மீது கண்ணாடி பொருத்துதல் பணிக்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தில் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>தொகை ரூ</th></tr>
<tr><td>1</td><td>திரு.என் எழிலன்</td><td>14600</td></tr>
<tr><td>2</td><td>M/s.K. ராஜாராம் & கோ</td><td>13550</td></tr>
<tr><td>3</td><td>திருமதி.பி.ஹயாதி பீ</td><td>13400</td></tr>
</table>
அ.கு.:– 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைவான விலைப்புள்ளிக் கொடுத்துள்ள திருமதி.பி.ஹயாதிபீ ஒப்பந்ததாரருக்கு வேலைஉத்திரவு வழங்கப்பட்டதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண்.17<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>31.01.2020</td>
<td>

**பொருள் எண்.14)** இந்நகராட்சிக்குட்பட்ட பேருந்துநிலையம் உட்புறம் உள்ள பி.டி. ஈஸ்வரன் மாளிகையில் வெளிப்புற சுவர் (தொங்கல்) பழுதடைந்துள்ளதால் இடித்து அப்புறப்படுத்தும் பணிக்கு தனி அலுவலரின் முன் அனுமதிபெற்று ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<table>
<tr><th>வ. எண்.</th><th>ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>தொகை ரூ</th></tr>
<tr><td>1</td><td>திரு.என் எழிலன்</td><td>20000</td></tr>
<tr><td>2</td><td>M/s.K. ராஜாராம் & கோ</td><td>19500</td></tr>
<tr><td>3</td><td>திருமதி.பி.ஹயாதி பீ</td><td>18500</td></tr>
</table>

அ.கு.:– 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திருமதி.பி.ஹயாதிபீ ஒப்பந்ததாரருக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண்.14<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>31.01.2020</td>
<td>
பொருள் எண்.15) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17, குட்டகரை தெரு மற்றும் அபாய்தெரு பகுதியில் உள்ள வால்வு தொட்டி பகுதிகளில் மணல்கொண்டு நிரப்புதல் பணிக்கு ஒப்பந்ததாரரிடம் இருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>தொகை ரூ</th></tr>
<tr><td>1</td><td>திரு.என் எழிலன்</td><td>9200</td></tr>
<tr><td>2</td><td>M/s.K. ராஜாராம் & கோ</td><td>9970</td></tr>
<tr><td>3</td><td>திருமதி.பி.ஹயாதி பீ</td><td>8800</td></tr>
</table>
அ.கு.:– 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2) தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திருமதி.பி.ஹயாதிபீ ஒப்பந்ததாரருக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண்.19 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 31.01.2020 | **பொருள் எண்.16)** இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவின் கீழ் பராமரிக்கப்பட்டு வரும் கே.எம்.எல் பூங்கா, கண்ணன் பூங்கா, கன்னியப்பன் பூங்கா மற்றும் ஜானகிராமன் பூங்காக்களின் ஆகியவற்றில் சேர்ந்துள்ள செடிகொடிகளினால் பூங்கா அழகு கெடுவதோடு விஷபூச்சிகளால் பொதுமக்களுக்கு தொல்லை அதிக அளவில் உள்ளதினால் மேற்படி செடிகொடிகளை சுத்தப்படுத்த ஆகும் தோராய செலவினம் ரூ.32000/—க்கு மன்றம் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br><br>அ.கு.:— 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதிபெற்று விலைப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம். | நகர்மன்றத் தீர்மான எண்.20 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 31.01.2020 | **பொருள் எண்.17)** ஆற்காடு நகராட்சியில் பணிபுரியும் அனைத்து பிரிவுகளில் கடைநிலை ஊழியர்களுக்கு 2020ம் வருடத்தின் சீருடைகள் மற்றும் தையற்கூலி வழங்க கூட்டுறவு மற்றும் கூட்டுறவு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் இருந்து விலைப்புள்ளிகள் பெற்று நடடிவக்கை மேற்கொள்ள தோராய செலவினத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு 13.12.2019ம் நாளில் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் மன்றபொருளில் முன் அனுமதி பெறப்பட்டதற்கு கீழ்காணும் விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முன் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. | நகர்மன்றத் தீர்மான எண்.21 அனுமதிக்கப்பட்டது |

| | துணியின் விவரம் | தமிழ் நாடு கைத்தறி கதர் கோ–ஆப்டெக்ஸ், வேலூர் | தமிழ் நாடு சிறு தொழில் மேம்பாட்டு கழகம், திருமழிசை | ஸ்ரீ சயர்கிரன் டிரேடர்ஸ், அன்வர்திகான் பேட்டை | லலித்தா ஏஜென்சி, அம்பத்தூர் |
|---|---|---|---|---|---|
| | காக்கி துணி | 166.00 | 165.00 | 195.00 | 168.00 |
| | வெள்ளை துணை | 166.00 | 165.00 | 195.00 | 168.00 |
| | பச்சை புடவை | 460.00 | 455.00 | 590.00 | 512.00 |
| | பச்சை ஜாக்கெட் | 77.00 | 75.00 | 115.00 | 95.00 |
| | வெள்ளை புடவை | 460.00 | 450.00 | 590.00 | 512.00 |
| | வெள்ளை ஜாக்கெட் | 77.00 | 75.00 | 590.00 | 512.00 |
| | நீலம் புடவை | 460.00 | 450.00 | 590.00 | 512.00 |
| | நீலம் | 77.00 | 75.00 | 115.00 | [illegible] |

31.01.2020

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | டவுல் | 118.00 | 165.00(Bz) | 170.00 | 160.00 |
| | டர்க்கி டவுல் | 510.00 | 525.00(Bz) | 690.00 | 540.00 |
| | ஆண் காலணிகள் | – | – | – | – |
| | பெண் காலணிகள் | – | – | – | – |

அ.கு.:– 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) 2020ம் வருடத்திற்கு இந்நகராட்சியில் பணிபுரியும் கடைநிலை அனைத்து ஊழியர்களுக்கும் 2020ம் வருடத்திற்கு பணி சீருடைகள் மற்றும் தையற் கூலி வழங்க தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்கள் செலவினத் தொகைக்கு ஒப்புதல் அளித்துள்ளமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

3) மேலே உள்ள ஒப்புநோக்கு பட்டியலில் உள்ள வ.எண்.2ல் காணும் தமிழ்நாடு சிறு தொழில் மேம்பாட்டு கழகம், திருமழிசை என்பவரின் விலைப்புள்ளியினை ஏற்று விநியோக உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

4) அரசு அனுமதித்துள்ள காலணியின் தொகை ரூ.140/–க்கு மிகையாமல் தமிழ்நாடு சிறு தொழில் மேம்பாட்டு கழகம், திருமழிசை என்பவரை சப்ளை செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

5) மேற்படி செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

ந.க.எண்.3302/2019/எச்1

| | | |
|---|---|---|
| 31.01.2020 | **பொருள் எண்.18)** இந்நகராட்சி நகரமன்ற தீர்மான எண்.275 நாள். **31.10.2019**ம் தேதிய தீர்மானம் படி பொதுசுகாதாரப் பிரிவிற்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் வாங்க ரூபாய் ஒரு லட்சம் அனுமதி பெறப்பட்டு குறைந்த விலைப்புள்ளி அளித்து AA Enterprises நிறுவனத்திற்கு சப்ளை உத்திரவு வழங்கப்பட்டு பட்டியல் தொகை ரூ.**1,68,050**/– வரப்பெற்றுள்ளது எனவே அனுமதிக்கப்பட்ட தொகையைவிட கூடுதலாக வருடம் தொகை ரூ.**68,050**/–க்கு மன்றம் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br><br>அ.கு.:– **1**) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br><br>**2**) பாதுகாப்பு உபகரணங்கள் சப்ளை செய்த நிறுவனத்திற்கு பட்டியல் தொகை வழங்க வேண்டியுள்ளதினால் மன்ற ஒப்புதல் எதிர்நோக்கி மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று தொகை வழங்க நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம். | நகர்மன்றத் தீர்மான எண்.22 ஒப்புதல் அளிக்கப்பட்டது |

<table>
<tr>
<td>31.01.2020</td>
<td>
பொருள் எண்.19) இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவின் கீழ் பராமரிக்கப்பட்டு வரும் கே.எம்.எல்.பூங்கா, கண்ணன் பூங்கா, கன்னியப்பன் பூங்கா ஆகியவற்றில் தேவையற்றது சேர்ந்துள்ள செடி கொடிகளினால், பூச்சிதொந்தரவு அருவறுக்க தன்மை ஏற்படுவதினால் பூங்கா சுத்தம் செய்பவர்களிடம் இருந்து விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>விலைப்புள்ளி ரூ</th></tr>
<tr><td>1</td><td>ECO Garb</td><td>32,000</td></tr>
<tr><td>2</td><td>R.கோபிராத், 91/சி, நவல்பூர்</td><td>40,000</td></tr>
<tr><td>3</td><td>என்.திருநாவுக்கரசு<br>பென்னத்தூர், வேலூர்</td><td>45,000</td></tr>
</table>
அ.கு.:– 1) வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வ.எண்.1ல் கண்டுள்ள ECO Garb நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளி அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஏற்கவும் உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண்.23<br>ஒப்புதல் அளிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 31.01.2020 | **பொருள் எண்.20)** இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவின் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு முடியும் தருவாயில் உள்ள மூன்று எண்ணிக்கை MCC (நுண்ணுரயிர் உரம் மையத்திற்கு தேவையான 30 நபர்களை மகளிர் சுய உதவி குழுக்கள் மூலம் மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்த விலைவிகிதத்தின்படி தற்காலிகமாக நியமனம் செய்து கொள்ளும் இதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.8,77,000/– (மூன்று மாதத்திற்கு மட்டும்) 30.04.2020–வரைக்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.<br><br>அ.கு.:– 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்<br><br>2) நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு எண்.308131/ஜெ3/2018 நாள். 11.12.2018ன் படி மேற்படி பணிக்கு 3 ஆண்டுகளுக்கு நிர்வாக<br><br>அனுமதி அளித்துள்ளமையால் கூடுதல் பணியாளர்கள் 136 நாட்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரிய நடவடிக்கை மேற்கொள்ளும் வரை மேற்படி பணிக்கு தேவையான பணியாளர்கள் சுய உதவிகுழுவுகள் நியமித்து கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம். | நகர்மன்றத் தீர்மான எண்.24<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 31.01.2020 | **பொருள் எண்.21)** ஆற்காடு நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் டெங்கு காய்ச்சல் தடுப்பு தொடர் நடவடிக்கையில் நான்கு மகளீர் குழு 55 பணியாளர்களை ஈடுபடுத்தி வருவதில் 31.01.2020ம் நாளுடன் முடிவடைவதால், மேலும் வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் மற்றும் வேலூர் சுகாதாரப் பணிகள் சுகாதார இயக்குநர் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைகளின்படியும், தற்போது பணிபுரிந்து வரும் அதே நான்கு மகளீர் குழு 55 பணியாளர்களை கொண்டு மேலும் மூன்று மாதங்களுக்கு (01.01.2020 முதல் 31.03.2020 வரை) வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகளின் உத்திரவு ந.க.எண் இ2/8687/2019 நாள். 06.05.2019ல் மஸ்தூர் (வ.எண்.24) 2019–2020ம் ஆண்டிற்கு தினசரி கூலி ரூ.277/– ஆக உயர்த்தி வழங்கப்பட்ட ஊதியத்தையே இப்பணியாளர்களுக்கும் வழங்கி டெங்கு கொசு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்திக்கொள்ள தோராய செலவினத் தொகை ரூ.11,25,000/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அ.கு.:– 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>2) 01.01.2020ம் நாள் முதல் 31.03.2020 நாள் வரை மாவட்ட ஆட்சியர் அவர்கள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தினசரி கூலியில் டெங்கு கொசு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்த மன்றப்பொருள் எதிர்நோக்கி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி அளித்தமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>3) மேற்காணும் செலவினத் தொகைகளை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br><br>ந.க.எண்.2600/2015/எச்1 | நகர்மன்றத் தீர்மான எண்.25 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 31.01.2020 | **பொருள் எண்.22)** ஆற்காடு நகராட்சியில் இயங்கிவரும் அம்மா உணவகத்திற்கு தேவையான இட்லி, சாம்பார் சாதம், தயிர்சாதம், அதற்கான இரசீது புத்தகங்கள் உள்ளூர் அச்சகத்தில் அச்சடித்து கொள்ள கீழ்கண்ட விலைப்புள்ளிகள் அச்சகத்தில் இருந்து வரப்பெற்றுள்ளன. | நகர்மன்றத் தீர்மான எண்.26 அனுமதிக்கப்பட்டது |

| வ. எண் | அச்சகத்தின் பெயர் | ரூ. |
|---|---|---|
| 1 | மணிபிரஸ்<br>124, அண்ணாசாலை, ஆற்காடு | 48.00 |
| 2 | ஜெயம் ஆப்செட் பிரிண்டர்ஸ்,<br>52/12, ஆரணிரோடு, ஆற்காடு | 42.00 |
| 3 | மணிமேகலை ஆப்செட்<br>45/31, ஜீவானந்தம் சாலை, ஆற்காடு | 50.00 |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் ஜெயம் ஆப்செட் பிரிண்டர்ஸ், ஆற்காடு என்பவர் அளித்துள்ள ரூ.42/– குறைந்த விலைப்புள்ளிகள் ஏற்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்ற தீர்மானம் எண்.102, நாள்.28.02.2019ன் படி ரூ.45,00,000/–க்கு 2019–2020 ஆண்டு ஒரு வருடம் வருவாய் நிதியிலிருந்து செலவு செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவே பொதுநிதியிலிருந்து இச்செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

2) தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஜெயம் ஆப்பெசட் பிரிண்டர்ஸ், ஆற்காடு என்பவருக்கு உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1090/2015/சி2

| | | |
|---|---|---|
| 31.01.2020 | **பொருள் எண்.23)** ஆற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு கலைக்குழுவினருடன் கலை நிகழ்ச்சி செய்தபோது புகைப்படம் எடுத்தமைக்கு பில்தொகை ரூ.4400/– வழங்கியுள்ளார். அத்தொகையினை வழங்கிட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது இத்தொகையினை பொதுநிதியிலிருந்து வழங்கவும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>அ.கு. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண்.1939/2019/எப்1 | நகர்மன்றத் தீர்மான எண்.27 அனுமதிக்கப்பட்டது |
| 31.01.2020 | **பொருள் எண்.24)** ஆற்காடு நகராட்சி வார்டுகளில் ஜல்சக்தி அபியான் மூலம் (மரங்கள்) மரக்கன்றுகள் நடும்விழாவிற்கு உயர்திரு.மாவட்ட ஆட்சித் தலைவர் வேலூர் அவர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்ட திரு.மயில்சாமி அண்ணாதுரை தமிழக விஞ்ஞானி அவர்கள் அது சமயம் புகைப்படம் எடுக்கப்பட்டது. புகைப்படத்திற்கான செலவுத்தொகை ரூ.4000/– மட்டும் 14.02.2020 அன்று புகைப்படம் எடுக்கப்பட்டது செலவுசீட்டு வழங்கியுள்ளார். அத்தொகையினை வழங்கிட மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. அத்தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>அ.கு. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண்.1939/2019/எப்1 | நகர்மன்றத் தீர்மான எண்.28 அனுமதிக்கப்பட்டது |
| 31.01.2020 | **பொருள் எண்.25)** ஆற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் மழைநீர் சேகரிப்பு, ஜல்சக்தி அபியின் மற்றும் விழிப்புணர்வு ஊர்வலம் இப்பணிகளுக்கு புகைப்படம் எடுக்கவும், புகைப்படம் எடுத்த விதத்தில் ஆகும் செலவினத் தொகை ரூ.50,000/– நகராட்சியின் பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அ.கு. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண்.1939/2019/எப்1 | நகர்மன்றத் தீர்மான எண்.29 அனுமதிக்கப்பட்டது |

31.01.2020

**பொருள் எண்.26)** ஆற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் மழைநீர் சேகரிப்பு அமைத்தல் மற்றும் மழைநீர் பயன்பாடு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திடவும் பொதுமக்கள் அறியும் வண்ணம் விழிப்புணர்வு ஊர்வலம் நடத்தி அதுசமயம் புகைப்படம் எடுக்கப்பட்டது. புகைப்படம் எடுக்க அன செலவினத் தொகையினை வழங்க மூன்று நபர்களிடமிருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது கீழ்கண்டவாறு.

| வ.எண் | பெயர் (ம) முகவரி | விலைப்புள்ளியின் தொகை ரூ.காப்பி ஒன்றுக்கு. |
|---|---|---|
| 1 | கருணாநிதி ஸ்டுடியோ,<br>ஜெராக்ஸ், DTP ஒர்க்ஸ்,<br>நெ.26,பாரதிதாசன் தெரு, ஆற்காடு | 20.00 |
| 2 | ரமேஷ் ஸ்டுடியோ<br>46, வேலூர் மெயின்ரோடு, ஆற்காடு | 22.00 |
| 3 | கண்ணன் கலர்பிரிண்டர் (ம) ஸ்டுடியோ<br>12, கலவைரோடு (மாடியிலல்<br>ஆற்காடு | 23.00 |

வரப்பெற்ற விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி வ.எண்.1 கருணாநிதி ஸ்டுடியோ,

ஜெராக்ஸ், DTP ஒர்க்ஸ், நெ.26,பாரதிதாசன் தெரு, ஆற்காடு என்பவருக்கு பணியினை வழங்க மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1939/2019/எப்1

நகர்மன்றத் தீர்மான எண்.30
அனுமதிக்கப்பட்டது

<table>
<tr>
<td>31.01.2020</td>
<td>
பொருள் எண்.27) ஆற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் மழைநீர் சேகரிப்பு குறித்து மற்றும் ஜல்சக்தி அபியான் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு குறித்து ஏற்படுத்திடவும் பொதுமக்கள் அறியும் வண்ணம் பிரச்சாரம் செய்வதை புகைப்படம் எடுக்க விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளி கீழ்கண்டவாறு.
<table>
<tr><th>வ.எண்</th><th>பெயர் (ம) முகவரி</th><th>விலைப்புள்ளியின் தொகை ரூ.காப்பி ஒன்றுக்கு.</th></tr>
<tr><td>1</td><td>கருணாநிதி ஸ்டுடியோ,<br>ஜெராக்ஸ், DTP ஒர்க்ஸ்,<br>நெ.26,பாரதிதாசன் தெரு, ஆற்காடு</td><td>20.00</td></tr>
<tr><td>2</td><td>கண்ணன் கலர்பிரிண்டர் (ம) ஸ்டுடியோ<br>12, கலவைரோடு (மாடியில்<br>ஆற்காடு.</td><td>23.00</td></tr>
<tr><td>2</td><td>ரமேஷ் ஸ்டுடியோ<br>46, வேலூர் மெயின்ரோடு, ஆற்காடு</td><td>22.00</td></tr>
</table>
வரப்பெற்ற விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி வ.எண்.1 கருணாநிதி ஸ்டுடியோ,
ஜெராக்ஸ், DTP ஒர்க்ஸ், நெ.26,பாரதிதாசன் தெரு, ஆற்காடு என்பவருக்கு பணியினை வழங்க மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.
அ.கு. மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.1939/2019/எப்1
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண்.31 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

31.01.2020

**பொருள் எண்.28)** ஆற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் மழைநீர் சேகரிப்பு (ம) மழைநீர் பயன்பாடு குறித்து பொதுமக்கள் அறியும் வண்ணம் பொது இடங்களில் பிரச்சாரம் செய்திடவும், பிரசுரம் செய்யும் நகராட்சியின் சார்பாக புகைப்படம் எடுத்திடவும் விலைப்புள்ளிகள் வரப்பெற்றது அவை கீழ்கண்டவாறு.

| வ. எண் | பெயர் (ம) முகவரி | விலைப்புள்ளியின் தொகை ரூ.காப்பி ஒன்றுக்கு. |
|---|---|---|
| 1 | ரமேஷ் ஸ்டுடியோ<br>46, வேலூர் மெயின்ரோடு, ஆற்காடு | 26.00 |
| 2 | கண்ணன் கலர்பிரிண்டர் (ம) ஸ்டுடியோ<br>12, கலவைரோடு (மாடியில்,)ஆற்காடு. | 25.00 |
| 3 | கருணாநிதி ஸ்டுடியோ,<br>ஜெராக்ஸ், DTP ஒர்க்ஸ்,<br>நெ.26,பாரதிதாசன் தெரு, ஆற்காடு | 20.00 |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளியில் வ.எண்.3க்கு கருணாநிதி ஸ்டுடியோ, ஜெராக்ஸ், DTP ஒர்க்ஸ், நெ.26,பாரதிதாசன் தெரு, ஆற்காடு என்பவருக்கு பணியினை வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1939/2019/எப்1

நகர்மன்றத் தீர்மான எண்.32
அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| 31.01.2020 | **பொருள் எண்.29)** இந்நகராட்சியில் குடிநீர் விநியோகம் பிரதான நீர் ஆதாரமாகிய வேப்பூர் மற்றும் பாலாற்றுப் படுகையில் காசிவிஸ்வநாதர் கோயில் அருகாமையில் அமைந்துள்ள கிணறு மற்றும் பெருமாள் கோயில் அருகாமையில் உள்ள நீர் உறிஞ்சு கிணறுகளில் இருந்து பெறப்படும் குடிநீரை கொண்டு 8 நீர்தேக்கத்தொட்டியில் நீரேற்றம் செய்யப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இவைகளை பராமரிக்க குடிநீர் பணியாளர் பொறியியல் பிரிவில் குழாய் பொருத்துனர்–1, காவலர்–2, மதகு திறப்பாளர்–1 ஆகிய பணியிடங்களுக்கான பணியாளர்கள் தற்போது உள்ளனர். பிரதான நீரேற்று நிலையத்தில் மின்வலியர் பணியிடமும் காலியாக உள்ளது. மேலும் தெருவிளக்கு 2502 எண்ணிக்கையில் உள்ளதை 1 மின் கம்பியாளர் மற்றும் 1 மின்கம்பி உதவியாளர் கொண்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. ஏற்கனவே 1 மின்கம்பியாளரை வேப்பூர் நீரேற்று நிலையத்திற்கு நிரந்தரமாக மின்வலியர் பணியை பார்க்க பணிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் 1 பணி ஆய்வர் பணியிடமும் காலியாக உள்ளது. மேற்கூறிய பணிகளுக்கு அவசியம் தேவையான பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் சுகாதாரப்பிரிவில் ஒப்பந்த அடிப்படையில் (Outsourcing) முறையில் பணிபுரிந்து வரும் பணியாளர்களை கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொதுசுகாதார பிரிவு Outsourcing பணியாளர்கள் பொறியியல் பிரிவில் பயன்படுத்தப்படுவதால் தூய்மை பணிகள் மேற்கொள்வதற்கு ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டு தினசரி திடக்கழிவுகளை கையாள்வது சிரமமாக உள்ளது என்றும் மேற்படி பணியாளர்களை திரும்ப வழங்கும்படியும் சுகாதார ஆய்வாளர்மற்றும் சுகாதார அலுவலர் பலமுறை கோரிக்கை விடுத்து வருவதாலும், மேலும் கடந்த ஒருமாதகாலத்திற்கு மேலாக குடிநீர்விநியோகம் ஏற்கனவே இருந்த ஒருநாள்விட்டு ஒருநாள் வழங்கப்பட்டு வந்ததை தவிர்த்து தற்போது தினசரி வழங்கப்பட்டு வருகிறது. இதனால் தேவைக்கு குறைவாகவே உள்ள பணியாளர்களை கொண்டு பராமரிப்பு செய்வது பணிச்சுமையாகவும், பணியில் தொய்வும் ஏற்படுகிறது. மேலும் சீரான முறையில் குடிநீர் விநியோகம் தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் பொறியியல் பிரிவில் கட்டுமான பணிகளை செவ்வனே மேற்கொள்ள போதுமான தகுந்த திறமையான பணியாளர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தினக்கூலி 2019–20 விகிதத்தில் அமர்த்தி செயல்படுத்த வேண்டிய அத்தியாவசிய நிலை உள்ளது. மேலும் நகராட்சி மூலம் நேரடியாக தினக்கூலி பணியாளர்களை அமர்த்தி பணிகளை செயல்படுத்திட வாய்ப்பில்லாமல் உள்ளது. மேலும் இந்நிலையில் ஆற்காடு நகராட்சி பகுதியில் ஆண்கள் சுயஉதவிக்குழு நடத்திவரும் சபரி கிரிவாசன் ஆண்கள் சுயஉதவிக்குழு தங்கள் குழுவில் உள்ள உறுப்பினர்களின் தகுதிக்கேற்ற பணியை வழங்க வேண்டி மனு செய்துள்ளதை ஏற்று 10 பணியாளர்களை அவரவர் தகுதிக்கேற்ற பணியில் ஈடுபடுத்திக்கொள்ளவும், அதற்காகும் 3 மாத காலத்திற்கான தோராய உத்தேச செலவினம் ரூ.3,00,960/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அ.கு. 1) பொறியியல் பிரிவில் மேற்கொள்ளப்படும் அத்தியாவசிய பணிகளுக்கு பணிகளின் அவசியம் தேவை என்பதால் சிறப்பினமாக கருதி மன்றம் அனுமதிக்கலாம்.2) மேற்கண்ட பணியாளர்களுக்கான செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம். | நகர்மன்றத் தீர்மான எண்.33 அனுமதிக்கப்பட்டது |

ஒம்/– (எஸ். ஷகிலா)
தனிஅலுவலர்
ஆற்காடு நகராட்சி